

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 54 | பாரிப்பு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜனவரி 2023 |
|---|---|---|---|
| KADHIR 54 | PAARIPPU 5 | THIRUVALLUVAR AANDU 2053 | JANUARY 2023 |






நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

நன்றி தினமலர் 14.12.2022

# காலிப்பணியிடங்கள் மறைக்கப்படுகிறதா

## தமிழ்நாடு பொறியியல் சங்கத்தினர் வேதனை

**மதுரை, டிச. 14 –** பொதுப்பணித்துறை, நீர்வளத்துறையில் உள்ள இளநிலை பொறியாளர் காலிப் பணியிடங்கள் மறைக்கப்பட்டு உதவி பொறியாளர் பணியிடத்திற்கு மட்டும் குரூப் தேர்வு அறிவிப்பு வெளியானதாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தினர் வேதனை தெரிவிக்கின்றனர்.

சங்க பொதுச் செயலாளர் முருகேசன் கூறியதாவது:

பொதுப்பணித்துறை, நீர்வளத்துறையில் பி.இ., படித்த உதவி பொறியாளர்கள், டிப்ளமோ படித்த இளநிலை பொறியாளர்கள் இருவரும் செக் ஷன் லெவல் பொறியாளர்களாக பணியமர்த்தப்படுகின்றனர். இளநிலை பணியிடத்தில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறையும் உதவி பொறியாளர் பணியிடத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி உயர்வு வழங்கப்படும்.

விதிகளின் படி உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர் பதவிக்கான காலியிடம் 3:1 என்ற விகிதத்தில் நிரப்பவேண்டும். டி.என்.பி.எஸ்.சி., குரூப் தேர்வு மூலம் இப்பணியிடம் நிரப்பப்படுகிறது. டிப்ளமோ முடித்த வரைவாளர், தொழில்நுட்ப உதவியாளர், ஓவர்சீயர் பதவியில் உள்ளவர்கள் 4 ஆண்டுகள் பணிமுடித்தால் இளநிலை பொறியாளர்களாக பதவி உயர்வு பெறுவர். இவர்கள் பகுதி நேர பி.இ., படிப்பு படித்தால் 5 ஆண்டுகள் கழித்து உதவி பொறியாளர்களாக பதவி உயர்வு பெறுவர்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி மொத்தமுள்ள உதவி பொறியாளர் காலிப்பணியிடங்களில் 75 சதவீதம் நேரடி நியமனம் மூலமும் 25 சதவீதம் பதவி உயர்வு மூலமும் நிரப்பப்பட வேண்டும்.

தற்போது இளநிலை பொறியாளர்களுக்கு உரிய காலிப் பணியிடங்களையும், பதவி உயர்வு மூலம் வர வேண்டிய உதவி பொறியாளர் காலி பணியிடங்களையும் சேர்த்து டி.என்.பி.எஸ்.சி., தேர்வுக்குள் பொதுப் பணித்துறை அதிகாரிகள் மாற்றி கொண்டு வந்துள்ளனர். இதனால் டிப்ளமோ படித்தவர்களுக்கு பொதுப்பணித்துறை, நீர்வளத்துறையில் வேலை கிடைக்காமல் போய்விடும் என்பதால் பழைய முறையை அமல்படுத்த வேண்டும் ,என்றார்.

## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 5 (2022 - 2023)



# தொடரும்

## நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

அரசு ஆணை எண்.1ன்படி தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து வந்த உதவிப் பொறியாளர்களின் பதவி உயர்வு சம்பந்தமான உச்சநீதிமன்ற தடையாணை வழக்கு இந்த மாதம் விசாரணைக்கு வரும். இதற்கிடையில் விதித்திருத்தம் (Rule Amendment) சம்பந்தமாகவும் உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொறியாளர் சங்கத்தின் அத்துமீறல்

பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர்கள் இரண்டு பேரும் சட்டத்திற்கும், விதிகளுக்கும் புறம்பாக இளநிலைப் பொறியாளர் காலிப் பணியிடங்களில் உதவிப் பொறியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருவதை கண்டித்து கடந்த பொறியியல் கதிரில் எழுதியிருந்தோம். இதற்கு கண்டனம் தெரிவித்து பொறியாளர் இதழில் எழுதியிருக்கிறார்கள்.

இது வெளிப்படையான அத்துமீறல் அராஜகம். அடுத்த சங்கத்தின் பிரச்சினைகளில் தலையிடுவது அநாகரீகம் என்று தெரிந்திருந்தும் தலையிடுவது எந்த விதத்தில் நியாயம் என்று தெரியவில்லை. இதிலிருந்து பெரும்பாலான தலைமைப் பொறியாளர்கள் பொறியாளர் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

இதில் வழக்கம் போல் தவறான தகவல்களை பதிவிட்டிருக்கிறார்கள். முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல இளநிலைப் பொறியாளர்களை TNPSC மூலம் நேரடியாக தேர்வு செய்ய முடியாது என்று எழுதியிருக்கிறார்கள். இதற்கு முன்பு TNPSC மூலம் தேர்வு செய்தது எல்லாம் தவறா? அரசாங்கம் தவறு செய்து விட்டதா?.

விதிகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

2.Appointment. -(a) Appointment to several categories in this branch shall be made as follows:-

Category 1

| | | |
|---|---|---|
| Junior Engineer | (i) | Promotion from Overseers, Technical Assistants and Draughting Officer; or |
| | (ii) | Direct recruitment, if no qualified and suitable candidate is available by promotion; |

மேற்கண்ட இரண்டு முறைகளில் தேர்வு செய்யலாம் என்று விதிகளில் மட்டுமல்லாமல் பல உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்புகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முதன்மை தலைமைப் பொறியாளர்கள் இளநிலைப் பொறியாளர் காலிப் பணியிடங்களில் உதவிப் பொறியாளர்களை நியமிக்க முயற்சி செய்து விதிகளை (Rules) மீறியிருக்கிறார்கள்.

உதவிப் பொறியாளர் காலிப்பணியிடங்களில் 25 சதவிகிதம் ஊட்டுப் பதவியிலிருந்து வந்த உதவிப்பொறியாளர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற தீர்ப்பு உள்ளது.

உச்சநீதிமன்ற வழக்கு எண். Civil Appeal Nos. 995/2009, 997-998/ 2009 நீதியரசர்கள் அருண்மிஸ்ரா, M.சந்தானாகௌடர் தீர்ப்பு நாள்.14.09.2017.

முதன்மை தலைமைப் பொறியாளர்கள் இந்த உச்சநீதிமன்ற தீர்ப்பையும் மீறியிருக்கிறார்கள்.

இவ்வளவு பெரிய தவறுகளை செய்த முதன்மை தலைமைப் பொறியாளர்களை தட்டிக் கேட்டால் பொறியாளர் சங்கம் வக்காலத்து வாங்குகிறது. வாழ்க ஜனநாயகம்.

விதிகளுக்கு புறம்பாக சலுகைகளை பெற்றதாக 3 அரசாணைகளை குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். இது அப்பட்டமான பொய்.

**எந்த சலுகையும் யாரும் எங்களுக்கு அளிக்கவில்லை. நாங்கள் சாதித்தவை அனைத்தும் நீதிமன்றங்களால் வழங்கப்பட்டவை.**

எந்த வழக்குகளிலும் இவர்களிடம் நாங்கள் தோற்றதில்லை. டிப்ளமா பொறியாளர்கள் இவர்களுக்கு சாதகமாக பெற்றுத்தந்த தீர்ப்பு. திருமால் வழக்கு.

திருமால் என்ற பகுதி நேர பட்டப்படிப்பு படிக்காத எலக்ட்ரிகல் இளநிலைப்பொறியாளர் பகுதி நேர பட்டப்படிப்பு படித்த திருவாளர்கள் உதயசூரியன், லிங்கம், ஆனந்த சிவக்குமார் என்ற மூன்று எலக்ட்ரிகல் உதவிப்பொறியாளர்களுக்கு எதிராக தொடுத்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு பொறியாளர் சங்கத்திற்கு சாதகமாக அமைந்து விட்டது.

திருமால் என்ற டிப்ளமா படித்தவர் வாங்கி தந்த தீர்ப்பில் உள்ளவற்றை cut and paste போட்டு 66 G.O வழக்கில் உயர்நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வாங்கியிருக்கிறீர்கள் அவ்வளவுதான். அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இன்னும் முடியவில்லை.

அடுத்து அரசு ஆணை எண்.155 பொதுப்பணி (பி2) நாள். 13.08.2015 பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு ஆணை எண். 155 என்றால் ஏதோ பணி அமர்வு அல்லது பதவி உயர்வு அளிப்பதற்காக வழங்கப்பட்ட அரசாணை என்று பலர் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அரசாணை எண்.1ன் படி உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களை பணிவரன்முறை செய்ய ஆளுநரின் ஆணைப்படி முறைப்படி பெறப்பட்ட ஒரு அரசாணை.

1990 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஆணை எண்.1க்கு எதிராக பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு விதித்திருத்தம் (Rule Amendment) வழங்க விடாமல் பொறியாளர் சங்கம் தடை செய்து வருகிறது. எனவே அரசு ஆணை எண்.1ன் படி உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களை பணிவரன்முறை (Regularisatuion) செய்வதற்காக பெறப்பட்ட அரசு ஆணை தான் அரசு ஆணை எண்.155.

சாதாரணமாக பணிவரன்முறை செய்வதற்காக கூட அரசு ஆணை வேண்டும் என்றால் இந்தியாவிலேயே இதுதான் முதல் முறையாக இருக்கும். பணிவரன்முறை செய்வதற்கு கூட முட்டுக்கட்டை போடும் அவலம் நமது துறையில் தான் நடக்கும். பணிவரன்முறை செய்வதற்கு கூட ஆளுநரின் ஆணைப்படி, முறைப்படி பெறப்பட்ட ஒரு அரசாணை இவர்களுக்கு விதிமீறல். இவர்களுக்கு எதிரானவை எல்லாம் விதிமீறல்.

அடுத்து அரசாணை எண்.1 பொ.ப.து நாள்.02.01.199 பற்றி எழுதியிருக்கிறார்கள். இந்த அரசாணைக்கு எதிராக, இந்த அரசாணை மூலம் உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களுக்கு எதிராக சுமார் 20க்கும் மேற்பட்ட வழக்குகளை மாற்றுச்சங்கத்தினர் தொடுத்தனர். உயர்நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை அனைத்து வழக்ககளிலும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் வெற்றி பெற்றது. உச்சநீதிமன்றம் சென்றார்கள்.

உச்சநீதிமன்றத்திலே பொய் மூட்டையை அவிழ்த்துவிட்டார்கள். அதாவது இவர்களுடைய Revised affidavit-ல் ஒரு இடத்தில் அரசாணை 1 சம்பந்தமான முழு விவரங்களும் முதல்வருக்கே தெரியாது என்பது போல் குறிப்பிட்டிருந்தார்கள். இதை ஓய்வு பெற்ற தலைமைச் செயலக அதிகாரி ஒருவர் சொன்னதாகவும் Revised affidavit-ல் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த அரசாணை முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் இடப்பட்ட அரசாணை அப்படியென்றால் முதல்வர் முழுவதுமாக விவரம் தெரியாமல் கையொப்பம் இட்டு விட்டாரா?.

எல்லா தடைகளையும் தாண்டி உச்சநீதிமன்றத்தில் அரசாணை எண்.1 சம்பந்தமான வழக்கில் 14.09.2017 அன்று தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

அரசாணை எண்.1க்கு விதித்திருத்தம் ஏன் வழங்கப்படவில்லை?.

02.01.1990 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.1 இதுவரை பொதுப்பணித்துறை வரலாற்றில் இல்லாத அளவில் பல்வேறு வழக்குகளை சந்தித்து உச்சநீதிமன்றம் வரை சென்று 14.09.2017 அன்று வென்றது.

அரசாணை எண்1க்கு விதித்திருத்தம் (Rule Amendment) வாங்க வேண்டுமானால் அதிலுள்ள ஊட்டு பதவிகளுக்கு விதியில் பதவி பெயர் மாற்றம் (Nomen clature change) வாங்க வேண்டும். Overseer, Technical Assistant இரண்டு பதவிகளுக்கும் பெயர் மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் Draughtsman - Technical Officer, Draughting Officer என்று இரண்டு முறை பெயர் மாற்றம் செய்யப்பட்டதால் அந்த பெயர்களை விதியில் திருத்தம் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு போராடி 2015 ஆண்டுதான் விதியில் இந்த Draughtsman என்பதை மாற்றி Draughting Officer என்று அரசாணைகள் வாங்கினோம்.

அதற்கு பிறகு அரசாணை எண்.1க்கு விதித்திருத்தம் பெற முயற்சிகள் மேற்கொண்ட பொழுது பொறியாளர் சங்கம் தொடர்ந்து இன்று வரை முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் Rule Amendment கொடுக்கக்கூடாது என்று தடுத்தார்கள். உச்சநீதிமன்றத்தில் நீதிமன்ற தடையாணை இல்லாததால் Rule Amendment கொடுக்கலாம் என்று நாங்கள் கூறினோம்.

பொதுப்பணித்துறை செயலாளர் அவர்கள் "உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்போது Rule Amendment கொடுக்கலாமா? என்று அரசு வழக்கறிஞரிடம் Openian கேட்டு கடிதங்கள் எழுதினார்கள். பல நினைவூட்டு கடிதங்கள் அரசு தரப்பில் அரசு வழக்கறிஞருக்கு (Government pleader) எழுதப்பட்டன.

ஆனால் அரசு வழக்கிறஞரிடம் இருந்து பதிலே வரவில்லை. அப்போது இருந்த அரசு வழக்கறிஞர் பொறியாளர் சங்கத்தின் வழக்கறிஞர் அரசு ஆணை எண்.1ஐ ஒழிப்பதற்காக பொறியாளர் சங்கத்தின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்.

ஒரு வழியாக உச்சநீதிமன்ற வழக்கு 14.09.2017 அன்று முடிவுக்கு வந்த பிறகும் விதித்திருத்தம் வழங்காமல் பொறியாளர் சங்கமும், பொறியாளர் சங்கத்தின் ஏஜெண்டுகளாக செயல்பட்டு வந்த சில தலைமைப் பொறியாளர்களும் தடுத்து வருகிறார்கள். கடந்த மாதம் கூட விதித்திருத்தம் வழங்கக்கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதிமன்ற தடையாணை பெற்றிருக்கிறார்கள்.

பொறியாளர் சங்கம் தங்கள் இயலாமையை மறைக்க தவறான தகவல்களை அள்ளி விடுவார்கள். பிளாக்மெயில் செய்வதாக எழுதியிருக்கிறார்கள். உத்தம புத்திரர்கள் என்ற இரண்டு வார்த்தைகளை போட்டால் இவர்கள் ஏன் பதறுகிறார்கள் என்று தெரியவில்லை.

பிளாக்மெயில் செய்து தலைமைப் பொறியாளர்களை மிரட்டுவது பொறியாளர் சங்கத்தின் வேலை. எங்கள் வேலை அல்ல. இல்லையென்றால் அரசு ஆணை எண்.1க்கு எப்போதோ விதித்திருத்தம் வாங்கியிருப்போம்.

இவர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இது மாதிரி பூச்சாண்டிகளையெல்லாம் சட்டை செய்வதே இல்லை.

பெரும்பாலான தலைமைப் பொறியாளர்கள் பொறியாளர் சங்கத்தின் பக்கம். அதிகார பலம் அத்துமீறுகிறது. போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்பவர்களிடம் AK 47 வைத்து போரிடுவதை போல.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588
9444 65 65 44
E.mail: d.murugavelsivan@gmail.com

**கடந்த மாதம் பொறியியல் கதிரில் முதன்மை தலைமைப் பொறியாளர்களை கண்டித்து நான் எழுதியதை தொடர்ந்து சிலர் கும்பலாக சென்று முதன்மை தலைமைப் பொறியாளரை சந்தித்து என்னை பணியிட மாற்றம் (Transfer) செய்ய சொல்லி வலியுறுத்தியதாக தெரியவருகிறது. அநியாயங்களை தட்டிக் கேட்டால் பணியிடமாற்றம். தொடரட்டும் சர்வாதிகாரம்.**

- பொதுச்செயலாளர்

W.P.Nos.35081 & 35089 of 2022

and

W.M.P.Nos.34533& 34540 of 2022

**MOHAMMED SHAFFIQ.J.**

These writ petitions are filed seeking for a direction to call for the records in impugned order letter No.S1(3)/88977/1992 dated 21.11.2022, which was issued by the 3rd respondent proposing to amend the Service Rules based on G.O.Ms.No.1, Public Works Department, dated 02.01.1990 and quash the same.

2. It is submitted that the impugned notification dated 21.11.2022 is contrary to the interim direction of the Hon'ble Supreme Court in S.L.P.No.17269 to 17271 of 2022. The relevant portion of the order of the Hon'ble Supreme Court reads as under:-

*"Permission to file special leave petition is granted. Issue notice.*

*Mr.Senthil Jagadeesan, Advocate waives and accepts notice for respondent Nos.3 and 10.*

*Notice be issued to other respondents. In addition to normal mode of liberty is granted to serve the Standing Counsel for the State of Tamil Nadu.*

*Dasti service is also permitted.*

*By way of ad-interim order, though we stay the impugned order of the Division Bench, it is directed that the respondents, who originally belongs to the cadre of the Technical Assistants, shall not be reverted from their present postings."*

3. The learned Counsel for the respondent seeks time to get instructions.

4. It is submitted that the impugned notification to regularize the appointment is contrary to the interim direction of the Hon'ble Supreme Court. In view of the prima facie case there shall be an order of Status Quo till 06.01.2023.

5. Post the matters on 06.01.2023.

28.12.2022

**MOHAMMED SHAFFIQ. J.**

W.P.Nos.35081 & 35089 of 2022

and

W.M.P.No.34533 of 2022

W.P.No.30353 of 2022

and

W.M.P.Nos.29795, 29796, 29797 and 29798 of 2022

**ABDUL QUDDHOSE.J.,**

The contention of the petitioners in this Writ Petition is that earlier the petitioners had challenged the pay reduction by filing a Writ Petition. In the said Writ Petition, the order of pay reduction was challenged and an interim stay was granted. Thereafter, it is contended that the said order was modified. Aggrieved by the modification, the petitioners had filed a Writ Appeal in W.A.No.1275 of 2021, etc., batch. The modification order passed by the learned Single Judge was stayed by the Hon'ble Division Bench in the said Writ Appeal. However, according to the petitioners, by the impugned order, annual increments have not been sanctioned in view of the earlier pay reduction, citing the orders of the Hon'ble Division bench in W.A.No.1275 of 2021. It is also contended by the petitioners that excepting for employees from the Pay and Accounts Office (East), other similarly placed employees have been regularly sanctioned increments as per Rule 24 of the Fundamental Rules of the Tamil Nadu Government.

2. Learned counsel for the petitioner drew the attention of this Court to the impugned order as well as to the Division Bench order dated 27.04.2021 passed in W.A.Nos.1271, 1273 and 1275 of 2021, wherein the order passed by the learned Single Judge in Writ Miscellaneous Petition on 19.04.2021 was stayed. He would submit that in the very same P.W.D. Department and Water Resource Department excepting for Pay and Accounts Office (East), all the other similarly placed employees have been regularly sanctioned annual increments.

3. According to the learned counsel for the petitioners, the petitioners have been discriminated and necessarily their annual increments will have to be paid.

4. On the last hearing date, when the matter came up for admission on 15.11.2022, this Court recorded the submissions made by the learned counsel for the petitioner and directed the Government Pleaders who appeared before this Court on that date to get instructions with regard to the petitioners' submissions.

5. Today, when the matter is listed, learned Additional Government Pleader appearing for the respondents seeks further time to get instructions. Having been given sufficient time to get instructions, this Court cannot grant further time for the respondents to get instructions with regard to the subject matter of this Writ Petition as a *prima facie* case has been made out by the petitioners.

6. Since a *prima facie* case has been made out by the petitioners, this Court is inclined to grant interim stay of the impugned order and also to issue interim direction to the fourth respondent to pay the annual increments to the petitioners without any pay deduction as is being granted to other similarly placed employees.

7. Accordingly, there shall be an order of interim stay of the impugned order and the fourth respondent is directed, pending disposal of this Writ Petition, to pay the annual increments to the petitioners without any pay deduction as is being granted to other similarly placed employees.

8. Post the matter for counter on 20.12.2022.

23.11.2022

**ABDUL QUDDHOSE.J.,**

W.P.No.30353 of 2022

and

W.M.P.Nos.29795, 29796, 29797 and 29798 of 2022

**நிதி (படிகள்)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.7, நாள்: 06.01.2023**

(சுபகிருது, மார்கழி - 22, திருவள்ளுவர் ஆண்டு 2053)

**சுருக்கம்**

**படிகள்** - அகவிலைப்படி - 01.01.2023 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

**பின்வருவனவற்றைப் படிக்கவும்**

அரசாணை (நிலை) எண்.254, நிதி (படிகள்)த் துறை, நாள்: 18.08.2022.

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| 01.07.2022 | அடிப்படை ஊதியத்தில் 34 சதவீதம் |

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2023 புத்தாண்டு பரிசாக, மாநில அரசுப் பணியாளர்களுக்கு 34 சதவீதத்திலிருந்து 38 சதவீதமாக அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்தில் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், அகவிலைப்படியினை 4 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தி அமைக்கப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| **01.01.2023** | அடிப்படை ஊதியத்தில் 38 சதவீதம் |

3. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் அகவிலைப்படி **01.01.2023** முதல் ரொக்கமாக வழங்கப்படும். 01.07.2022 முதல் 31.12.2022 வரை அகவிலைப்படியானது தொடர்ந்து 34 சதவீதமாகவே இருக்கும்.

4. ஜனவரி **2023** முதல் அகவிலைப்படி தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டவிடப்பட வேண்டும்.

5. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேர பணியாளர்களுக்கும், சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதிநேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

6. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் (Pay drawn in the prescribed Levels in the Pay Matrix on Special times of Scale) ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள் / எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

7. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப்பெருந்தலைப்பு, சிறுதலைப்பின் கீழ்வரும் “303. அகவிலைப்படி” என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

8. இதற்கான பட்டியல்கள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.முருகானந்தம்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**FINANCE (PENSION) DEPARTMENT**

**G.O.Ms.No.374, Dated 26th December, 2022**

(Subakiruthu, Margazhi-11, Thiruvalluvar Aandu 2053)

**ABSTRACT**

**Pongal Festival, 2023** - Grant of Pongal Prize to **‘C’ and ‘D’ Group** Pensioners / All Family Pensioners - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No. 02, Finance (Pension) Department, dated: 01.01.2022.
2. G.O.Ms.No. 373, Finance (Allowance) Department, dated: 26.12.2022.

**ORDER:**

The Government sanction a lumpsum Pongal Prize amount of **Rs.500/-** (Rupees Five Hundred only) to all Government Pensioners who retired from the categories of ‘C’ and ‘D’ Group (‘C’ and ‘D’ Group of Scales of Pay (Ordinary Grade) is annexed to this order) including all ‘C’ and ‘D’ Group Pensioners of Aided Educational

Institutions, Local Bodies, Ex-Village Establishment (Ex-Village Officers and Village Servants / Assistants), Ad-hoc Pensioners of all categories (Pensioners those who are drawing Special Pension of Rs.2,000/- with effect from 1-10-2017 i.e. Noon Meal Organisers, Anganwadi Workers, Mini Anganwadi Workers, Cooks, Cook Assistants, Anganwadi Helpers, Panchayat Secretaries, Village Librarian, Sweepers / Sanitary Workers / Scavengers, Plot Watchers, Anti-poaching Watchers, Police Station Cleaners, Ayah) and to All Family Pensioners irrespectivbe of the Groups from which the Pensioners / Deceased Government employee had retired / died while in service.

2. This order shall also be applicable to all **'C' and 'D' Group** provisional pensioners. The Pongal Prize amount shall not be admissible to those employees who retire on or after 26.12.2022.

3. Those who have retired / died in harness on or after 01.01.2022 are not eligible for the Pongal Prize amount if they are paid Adhoc Bonus as per the orders issued in the Government Order second read above. For this purpose, the Pension Disbursing Officers shall obtain non-drawal certificates from the departments concerned before making payment to these Pensioners.

4. This order is not applicable to the following categories of pensioners:-

(i) Special Pensioners such as Ulema Pensioners, State Freedom Fighters Pensioners and Social Pension for Scholars and Eminent persons, etc.

(ii) Family Pensioners who are appointed on compassionate grounds if adhoc bonus / special adhoc bonus is paid to them as applicable to the employees in service.

(iii) All Pensioners who retired from Group 'A' and 'B' posts including All India Service Officers and Officers governed by University Grants Commission (UGC) / All India Council for Technical Education (AICTE) / Indian Council of Agricultural Research (ICAR) Regulations.

5. The Government also direct that the procedure indicated below shall be followed for disbursement of Pongal Prize amount in respect of Pensioners / Family Pensioners coming under the **Pension Pilot Scheme.**

(i) In respect of those Pensioners / Family Pensioners to whom pension/family pension is sent by Money Order at Government cost, the Pongal prize amount also shall be sent by Money Order at the Government cost.

(ii) In respect of Pensioners / Family Pensioners to whom pension / family Pension is paid through Banks.

(a) In Pension Pay Office, Chennai and District Treasuries / Sub-Treasuries where the cheque system of payment of bills / Electronic Clearing System is in Vogue, the Pension Pay Officer, Chennai and District Treasury Officer

/ Sub Treasury Officers are permitted to issue cheques and send the cheques to the respective paying branches of the bank with a coverting list of Pensioners / Family Pensioners for crediting the amount to the pensioners' / family pensioners' savings bank account

(b) As regards Banking Sub-Treasuries where the cheque system of payment of bills / Electronic Clearing System is not in vogue, the Sub-Treasury Officers are permitted to get Banker's cheque/Bank draft and send them to the respective Pensioners for creditiong the amount to the pensioners' / family pensioners' saving bank account.

6. In respect of Pensioners / Family Pensioners for whom expenditure is met from State Consolidated Fund, the expenditure shall be debited to the following Head of Account:-

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 800. Other Expenditure - State's Expenditure - AF. Pongal Prize to Pensioners and Family Pensioners - 327. Pensions - 09. Others.

**IFHRMS: (D.P.C. 2071 01 800 AF 32709P".**

In respect of payment of Pongal Prize to Ex-Village Officers, the expenditure shall be debited to the following Head of Account:-

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 800. Other Expenditure - State's Expenditure - AK. Other Expenditure - Pongal Prize to Ex-Village Officers - 327. Pensions - 09. Others.

**IFHRMS: (D.P.C.2071 01 800 AK 32709)"**

7. In respect of Pensioners **('C' and 'D' Group)** / Family Pensioners of Local Bodies for whom expenditure is met from the fund maintained by the Director of Local Fund Audit or Municipal Funds, as the case may be, the expenditure shall be met from the respective funds. In respect of Special Pensioners of Noon Meal Organisers, Anganwadi Workers, Mini Anganwadi Workers, Cooks, Cook Assistants, Anganwadi Helpers, the Block Development Officers / Child Development Project Officer concerned shall debit the expenditure under the head of account mentioned in para-6 above.

8. The Pongal Prize amount sanctioned above shall be paid to the eligible Pensioners / Family Pensioners and Ex-Village Officers immediately.

9. Necessary provisions have been made under the relevant head of account in Budget Estimate **2022-2023.**

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## ABSTRACT

Public Works Department - Reforms in Tender Procedures - Provision towards the Unforeseen Items and Petty Supervision Charges and Contingencies in preparation of Detailed Project Report / Detailed Estimate - Amendment - Order - Issued.

**Public Works (G2) Department**

**G.O. (Ms). No. 107** **Dated: 09.11.2022**

சுபகிருது, ஐப்பசி-23

திருவள்ளுவர் ஆண்டு - 2053

**Read:**

1. G.O. (Ms). No. 222 Public Works (G2) Department, dated: 08.04.1999.
2. Government letter No. 35458/G2/2008-11, Public Works Department, dated 02.11.2010.
3. From the Managing Director, Tamil Nadu Water Supply and Drainage Board, Chepauk, Chennai letter even Nos. F.23618/Unforeseen Item/ DO / PDC/2018, dated 30.07.2018 and 09.10.2019 addressed to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Chennai-9.
4. From the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Public Works Department, Chennai Region, Chepauk, Chennai Letter No. HDO(A)/ 2344/2022, dated 16.04.2020.

**ORDER:**

In the Government Order first read above, orders have been issued relating to Purchase and Tender Procedures on the Recommendation of the High Level Committee under the Chairmanship of Justice G.Ramanujam, constituted by the Government to examine and recommend procedural reforms and other measures for eliminating and preventing corruption in Administration. In this Government Order, among other things, orders have been issued regarding provision towards the Unforeseen items and Petty supervision charges and contingencies for preparation of estimates of works mentioned below:-

| S.No | Recommendation of the High Level Committee | Orders of the Government |
|---|---|---|
| 12 | The existing practice of providing additional 5% of the estimate for "unforeseen items" may be stopped and the existing provision of another 5% for "petty supervision and contingencies" may be reduced as 2.5% for "contingencies" only. | 2.5% each shall be provided for "unforeseen items" and "petty supervision and contingencies" |

2. In the Government letter second read above, Government have issued clarification that the lump sum provision may be calculated at 2.5% on total value of all quantifiable works only and that the other lump sum provisions in the estimate shall not be considered for allowing this 2.5% lump sum provision towards Unforeseen items and Petty Supervision charges and Contingencies.

3. In the letter third read above, the Managing Director, Tamil Nadu Water Supply and Drainage Board has stated that in the Detailed Project Reports (DPR) for Water supply Scheme (WSSs) and Under Ground Sewerage Schemes (UGSSs), provision of 2.5% each, towards 'unforeseen items' and 'Petty Supervision and Contingencies' was adopted based on the orders issued in the Government Order first read above. Subsequently, the provision for "Petty Supervision and Contingencies" at 2.5% has been reduced to "1% for Contingencies". Hence Detailed Project Reports were being prepared by the Tamil Nadu Water supply and Drainage Board with provision towards Contingencies at the rate of 1% and Unforeseen items at the rate of 2.5% on base cost. This practice of adopting 2.5% is not in consonance with the provisions of the said Government Order and the existing practices of Tamil Nadu Water Supply and Drainage Board needs to be rectified and validated by a Government Order.

4. The Managing Director, Tamil Nadu Water Supply and Drainage Board has further stated that the above subject was placed before the Board in its Meeting held on 20.06.2018 and the Board has resolved to recommend to Government for issue of orders to adopt 2.5% on the value of base cost of the Detailed Project Report towards "unforeseen items' and 'Petty Supervision & Contingencies' for Water Supply and Sewerage Projects" and he has requested necessary orders of the Government.

5. In his letter fourth read above, the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai has stated that in the Government Letter second read above the Government have issued clarification that the lump sum provision may be calculated at 2.5% on total value of all quantifiable works only and that the other lump sum provisions in the estimate shall not be considered for allowing this 2.5% lump sum provision towards Unforeseen items and petty Supervision charges & Contingencies. He has further stated that while preparing the estimates for all the building schemes, provision at 2.5% on the value of all quantifiable items of works only be allowed towards "Unforeseen Items" and "Petty Supervision Charges and Contingencies" in Public Works Department.

6. In the above circumstance, after careful examination, the Government hereby issue the following amendment to the Government Order first read above, in respect of the orders issued regarding provision towards Unforeseen Items, Petty Supervision charges and Contingencies in preparation of Detailed Project Reports / Detailed Estimates:-

| Sl. No | Orders issued in G.O.(Ms). No.222, Public Works (G2) Department, dated 08.04.199 | Amendment Orders |
|---|---|---|
| 12. | 2.5% each shall be provided for "unforeseen items" and "petty supervision and Contingencies" | 2.5% shall be provided for "unforeseen items, Petty supervision charges and contingencies" calculated on the value of all quantifiable items of work only. The other lump sum provisions included in the estimate for works shall not be considered for allowing the above said provision. |

7. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No.45909/PW-II/2022, dated 02.11.2022

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.MANIVASAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**FINANCE (salaries) DEPARTMENT**
**Secretariat,**
**Chennai - 9.**

**Letter No.3750 / Finance (Salaries) / 2022, Dated: 22-10-2022**

From

Thiru.N. Muruganandam, I.A.S.,
Additional Chief Secretary to Government.

To

The Commissioner of Treasuries and Accounts,
3rd Floor, Perasiriyar K.Anbazhagan Maaligai,
No.571, Anna Salai, Nandanam,
Chennai - 600 035.

Sir,

Sub: Law Officers Appearance Fees - Extension of Electronic Clearance System (ECS) to payment of Law Officers fees - Dispensation of production of Advanced Receipt / Advanced Stamped Receipt - Orders - Issued.

Ref: 1. G.O.Ms.No. 175, Finance (Salaries) Department, Dated: 18.06.2010.
2. Home Department U.O.No.46713/OP.2/2022, dated: 23.09.2022.

I am to invite your attention to the reference first cited wherein the Government of Tamil Nadu has ordered to dispense with the system of obtaining acquittance for payments made to Government employees to avoid wastage of time and labour when credits are passed on to the bank accounts of individual Officers / Staff through Electronic Clearance System (ECS).

2. In the reference second cited, the Home Department has requested for dispensation of demand / production of Advanced Receipt / Advanced Stamped Receipt of fee bills to the Law Officers as Electronic Clearance System (ECS) payment is being adopted for settlement of fee bills also.

3. In continuation of the Government Order cited, it is decided that the practice of the production of Advanced Receipt / Advanced Stamped Receipt may be dispensed with for settlement of fees to the Law Officers, subject to the following conditions:

i) The acknowledgment of the bank branches is to be ensured by the Drawing and Disbursing Officers (DDOs) and confirmation is made to Pay and Accounts Officers / Treasuries / Sub Treasuries, as the case may be. Under the existing procedure in the State, in respect of payments to employees, acknowledgment are obtained by the Drawing and Disbursing Officers after the respective bills are advised for Electronic Clearance System (ECS) credit.

ii) In the event of original bill is not produced, certification has to be provided by the Departments for avoidance of duplication in payment. Drawing and Disbursing Officers (DDOs) must ensure that certificates are provided without fail.

iii) The Drawing and Disbursing Officer shall however, stitch the Electronic Clearance System (ECS) credit advice / extracts of such advice with the office copy of the each bill drawn for Law Officers and Drawing and Disbursing Officers (DDOs) shall ensure that the payment has been made to the Law Officers through Electronic Clearance System (ECS) and payment details are furnished to the departments.

iv) All other procedures shall be followed before sanctioning the fee bill.

4. Necessary amendments to Tamil Nadu Financial Codel provisions will be issued separately.

Yours faithfully,

sd/-

for Additional Chief Secretary to Government.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் எஸ்.பாபு, உதவிசெயற்பொறியாளர், அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக ரூ.10,000/-(பத்தாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் S.ஆறுமுகம் உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1950/- (ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

## TREASURIES AND ACCOUNTS DEPARTMENT

From

Thiru.K.Vijayendra Pandiyan., IAS.,
Commissioner of Treasuries and Accounts,
3rd Floor, Perasiriyar K.Anbazhagan Maaligai,
No. 571, Anna Salai, Nandanam,
Chennai - 600 035.

To

All Pay and Accounts Officers
All Sub Pay Accounts Officers,
All Treasury Officers,
The PPO, Chennai.

**Rc.No.10481/NHIS-2/2022 Dated: 27.12.2022**

**Sir,**

**Sub:** New Health Insurance Scheme 2022 for Pensioners - Contribution Pension Scheme Retirees and their Spouse - Government issued instructions - Regarding.

**Ref:** 1. G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, Dated: 30.06.2022.

2. The Government Letter No.11741/Finance (Health Insurance) / 2022, Dated: 16.07.2022.

3. This Office letter R.c.No.10481/NHIS-2/2022, Dated: 25.07.2022.

4. The United India Insurance Company, Chennai letter Dated: 29.08.2022.

5. The Government Letter No. 11741A/Finance (Health Insurance-2)/ 2022, Dated: 16.12.2022.

The attention of the subordinate are invited to the reference cited.

In the Government Order first cited, it has been ordered that a Retired Contributory Pension Scheme Employees and their spouse are entitled to opt or not to opt to avail the benefits under New Health Insurance Scheme 2022 for Pensioners. If opting for the Scheme, they should exercise an option in the prescribed From appended in Annexure - III of the Guidelines to the Authorities concerned and shall remit their subscription in one lump sum every year on or before 31st July for a block of four years commencing from 01.07.2022 to 30.06.2026 directly to the United India Insurance Company Limited or through its officers in the Districts duly giving an undertaking that remittance of yearly subscription shall be made by them for the subsequent years of the scheme also even though they exhaust the benefit of the total sum assured in the first year itself.

In the reference second cited, Government has given instruction to all Head of Departments / Head of offices that Contributory Pension Scheme Retirees shall remit their subscription in one lump sum every year on or before 31st July for a block of four years commencing from 01.07.2022 to 30.06.206 directly to the United India Insurance Company Limited or through its officers in the Districts duly

furnishing an undertaking to continue and to make payment to the scheme for four years even through the maximum sum assured is exhausted in the first year by the Head of Departments / Head of Offices.

Further, the Government has requested to issue necessary instruction to all their subordinate officers to intimate the availability of the Insurance Scheme to all the Contributory Pension Scheme Employees retired from their Department so as to enable them to exercise the option for the Scheme Retirees and their spouse in the prescribed Form appended in the Annexure - III of the Guidelines shall be verified and attested by the Head of the Officers concerned.

In the reference 3rd cited, all subordinate officers have also requested to issue necessary instructions to all the staff working under their control and the Pay and Accounts Officers / Treasury Officers and Sub Pay and Accounts Officers have also requested to communicate the above Government letter to the Drawing and Disbursing Officers under their control.

In this regard, the Government has decided to obtain option form with an undertaking in a prescribed format. It should comprise all aspects as mentioned in Government Order first cited. In addition, in the undertaking, CPS Retirees have to give undertaking to the effect that they will abide by the norms and would face legal action against the default in payment of subscription for the period.

Therefore, all the Treasury Officers / PAO's are requested to collect and furnish the data on Contributory Pension Scheme Retirees who have given their options to avail New Health Insurance Scheme received through the Head of Departments / Head of Offices so far along with undertaking format enclosed with this letter and furnish the same to this office on or before 10.01.2023, so as to send a consolidated report to Government. Further, it is also requested to send an NIL report, if no option form received from the Head of the Departments / Head of Offices.

Sd/-

**Commissioner of Treasuries and Accounts.**

Encl: Undertaking form

**CPS RETIRES - UNDERTAKING FORM**

Name of the CPS Retiree :
Spouse Name :
District :
CPS No :
Date of Retirement :
Date of Appointment :
Name of the Office at the time of Retirement :
Willingness to enroll under NHIS for Pensioners : Yes/No
Willingness to pay the premium at the start of : Yes
every block Year

I am willingness to enroll under Pensioners New Health Insurance Scheme 2022 and shall remit by subscription in one lumpsum every year on or before 31st July for a block of four years commencing from 01.07.2022 to 30.06.2026 directly to the United India Insurance Company Limited or through its offices in the Districts and give an undertaking that remittance of yearly subscription shall be made by me for the subsequent years of the scheme eventhough the benefit of total sum assured was exhausted time in the first year itself.

I will abide by the norms and would face legal action against the default in payment of subscription for the period.

Name:

Signature:

Date:

## நன்கொடை

பதவி உயர்வு பெற்றமைக்காக நன்கொடை அளித்த திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர்கள்

1. பொறி. M.S. முகமது ராஃபி, உதவிசெயற்பொறியாளர் - 5,000/-
2. பொறி. A. இராஜேந்திரன், உதவிசெயற்பொறியாளர் - 5,000/-
3. பொறி. V. இராமநாதன், உதவிசெயற்பொறியாளர் - 5,000/-

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் P.B.மோகன், கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 27.12.2022 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவர் பொறியாளர் கே.சீனிவாசன், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் அவர்கள் 01.01.2023 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொங்கும் நிதிச்செயலாளர் பொறியாளர் M.சென்ராம், உதவிசெயற் பொறியாளர் (ஓய்வு) அவர்களின் தாயார் திருமதி. M.மாரியம்மாள் அவர்கள் 27.12.2022 அன்று இயற்கை எய்தினார்.

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் உறுப்பினர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே சென்னைக்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லத்தை பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



# பணி ஓய்வில் விடைபெற்றேன்

**S.நடராஜரத்தினம் B.E.,**
உதவிசெயற்பொறியாளர், பொ.பது
ஓய்வு, சிவகங்கை.

அன்புள்ள சகோதர பொறியாளர்கள் அனைவருக்கும் ஓய்வு பெற்ற பொறியாளர் S.நடராஜரத்தினம் உதவிசெயற்பொறியாளர் ஆகிய நான் எனது புத்தாண்டு வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பொதுப்பணித்துறையில் கடந்த 20.07.1984 ஆம் ஆண்டு தொழில்நுட்ப உதவியாளராக விருதுநகர் கோட்டத்தின் கீழ் அருப்புக்கோட்டையில் உள்ள உபகோட்டத்தில் பணியில் சேர்ந்தேன். அன்றைய தினம் எனக்கு சங்கம் இருப்பது பற்றி ஒன்றும் தெரியாது. அப்போதைய பொறியாளர் இராஜாஜி அவர்கள் பட்டயப் பொறியாளர்களுக்கென சங்கம் இருப்பதாகவும், அதில் என்னை உறுப்பினராக இணைய அறிவுறுத்தியதின் பேரில் நான் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் என்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டேன்.

விருதுநகர் கோட்டத்தில் பணிபுரிந்து பின் உபகோட்டத்தின் பணிகள் முடிவுற்றதால் (RLEGP) பின் மாறுதலுக்காக போராடி நாகர்கோவிலில் NWMP திட்டத்தில் மாறுதல் பெற்று கோதையாறு திட்டப் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் (DPR) மேற்கொண்டேன். அங்குதான் சங்கத்தில் உறுப்பினராகவும், சங்க பொறுப்பாளராகவும் பணியாற்றிய காலத்தில் மூத்தபொறியாளர்கள் ஆறுமுகசுந்தரம், வீரராஜ், வணக்கத்திற்குரிய பொறியாளர் கோல்டுவின் இம்மானுவேல் மற்றும் மையச்சங்க பொறுப்பாளர் தியாகசெம்மல் சி.ப.சண்முகம் மற்றும் மூத்த பொறியாளர்கள் சங்கத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றி அறிந்தேன்.

நான் 1989 முதல் 1993 முடிய பொறியியல் பட்டம் பெற்றேன். பின் நாகர்கோவிலில் 23.07.1997 வரை பணியாற்றி கடும் போராட்டங்களுக்கு பிறகு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று திருநெல்வேலியில் பணிபுரிந்தேன். பின் பணிமாறுதலில் விருதுநகர் சிறப்பு திட்டக் கோட்டத்திலும், கூட்டுறவு கட்டுமான பணிகள் உபகோட்டத்திலும் பணிபுரிந்தேன். பின் கட்டட கோட்டம் விருதுநகரில் பணிபுரிந்து 2006ல் உதவிப் பொறியாளராக பதவி பெயர் மாற்றம் பெற்று, பின் 2014ல் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வில் அயற்பணியாக இந்து சமய அறநிலையத்துறை, திருத்தணியிலும் பணிபுரிந்து மீண்டும் கட்டட (மருத்துவ பணிகள்) உபகோட்டம் தேனியில் 2017 முதல் 2022 வரையிலும், பின் சிவகங்கை (மருத்துவ பணிகள்) கட்டட கோட்டத்தில் பணிபுரிந்து கடந்த 31.10.2022 அன்று பணிஓய்வு பெற்றேன்.

பொறியாளர்கள் அனைவரையும் சங்கத்தின் மூலம் நிறைய பழகிக் கொண்டதின் பேரில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்களிடம் இருந்து ஓய்வு பெற்றுள்ளேன்.

வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்
வளர்க பொறியாளர்கள் ஒற்றுமை

நன்றி 10 • Chennai 15.12.2022 தினகரன் கதம்பம்

# wiki யானந்தா

## பீட்டர் மாமா

மாவட்டத்தில் பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம் நடத்த கூட மாஜி அமைச்சருக்கு விருப்பமில்லையாம். உறுதியான தலைமை இருக்கும் தெரியும் வரை ஏதாவது ஒரு அணியில் இருக்க வேண்டுமே என்பதற்காக சேலத்தார் அணியில் இருக்கிறாராம். எனவே, ஆர்ப்பாட்டம், போராட்டத்துக்கு தானாக கூட்டம் சேராது. இதனால் 'கரன்சியை' கொடுத்தாவது கூட்டத்தை கூட்டி விடலாம் என்ற நிலைக்கு மாஜி அமைச்சர் முன்வந்துள்ளாராம். அந்த அளவுக்கு பெரிய கூட்டத்தை கூட்ட கூட மாஜி அமைச்சர் படாத பாடு பட்டு வருகிறராம்..." என்றார் விக்கியானந்தா.

"தமிழக பொதுப்பணித்துறையில் என்ன நடக்குது..." என்று கேட்டார் பீட்டர் மாமா.

"பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் சட்டத்திற்கும், விதிகளுக்கும் புறம்பாக இளநிலைப் பொறியாளர் காலிப்பணியிடங்களில் உதவிப்பொறியாளர்களைக் கொண்டு பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கையில் மூத்த அதிகாரிகளில் ஒரு குழுவினர் தீவிரமாக உள்ளார்களாம். பொதுப்பணித்துறை அமைச்சருக்கு இந்த மூத்த அதிகாரிகள் தவறான தகவல் கொடுத்துள்ளதாக சொல்றாங்க.



விதிகளுக்கு புறம்பாக இளநிலைப் பொறியாளர் காலிப் பணியிடங்களில் உதவிப் பொறியாளர்களை நியமிக்க தடை செய்ய வேண்டும் என பொறியாளர் சங்கத்தினர் கோரிக்கை வைக்கிறாங்க..." என்றார் விக்கியானந்தா.

"சஸ்பெண்ட் நடவடிக்கையால் கதிகலங்கிய அலுவலர்கள் குறித்து சொல்லேன் கேட்போம்..." என்றார் பீட்டர் மாமா.

"தீப மாவட்டத்தில் 18 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 860 ஊராட்சிகளில் உள்ள வீடுகள்ல மழைநீர் சேமிக்க தனிநபர் உறிஞ்சு குழி கட்டப்பட்டு வருது. இதுல தாமாக முன்வந்து ஆர்வம் காட்டுபவர்கள் வீடுகள்ல ₹11,200 அரசு நிதியில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு, 100 நாள் வேலை திட்டம் மூலம் கட்டி தரப்படுது. ஆனா பல ஊராட்சிகள்ல மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு கட்டாமலேயே போலி கணக்கு காட்டி முறைகேடு நடப்பதாக புகார்கள் எழுந்துள்ளது.

அதற்கேற்ப கலசமான ஒன்றியத்துல மாவட்ட அதிகாரி சில நாட்களுக்கு முன் ஆய்வு செஞ்சாரு. அப்போ முறைகேட்டுல ஈடுபட்டதா 3 பேரை சஸ்பெண்ட் செஞ்சுட்டாரு. இதேபோல தீப மாவட்டத்துல இருக்குற அனைத்து ஊராட்சியில்யும் ஆய்வு செஞ்சா பலர் சிக்குவாங்கன்னு குரல்கள் ஒலிக்க தொடங்கியிருக்கு. இதுனால மாவட்ட அதிகாரி அடுத்து எந்த ஊராட்சியில ஆய்வுக்கு செல்வாரோன்னு சம்பந்தப்பட்ட துறையை சேர்ந்த அலுவலர்கள் பலர் கதிகலங்கி போய் இருக்காங்களாம்..." என்றார் விக்கியானந்தா. ■

Under Postal Regd No. TN/CH/(C)/591/2022-2024 & WPP LICENCE No.TN/PMG(CCR)/WPP-664/2022-2024,
Date of Publiciation 1st Week of Every Month. R.N.I. No.R.33590/1978. Posted on 5-11 of Every Month

JANUARY 2023

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை & நீர்வளத்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

## மாநில செயற்குழுக் கூட்டம் மறு தேதி அறிவிப்பு

மழை காரணமாக தள்ளி வைக்கப்பட்ட நமது சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் வருகிற ஜனவரி திங்கள் 29ம் தேதி சென்னையில் நடைபெற உள்ளது.

இடம் : பொறியாளர் சி.ப. சண்முகம் அரங்கம்
பொறியியல் இல்லம்,
எண்.19/10 லால்முகமது தெரு,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. என். முருகேசன்
செயலாளர் அமைப்பு & சட்டம்

தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,